**வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனி - 2015**

-----------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனியின் (கம்பனி) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) வட்டி வருமானம் ரூபா 201,470 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக மீளாய்வாண்டிற்கான இலாபம் சமமான தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) விற்பனை செய்யப்பட்டிருந்த ஆனால் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிராத ரூபா 59,668 பெறுமதியுடைய 05 மெற்றிக் தொன் உப்பு இருப்பு 2016 மார்ச் 31 இல் உள்ளபடியான இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான இருப்பு மற்றும் இலாபம் சமமான தொகையினால் மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இருப்புக்களின் புத்தகப்பெறுமதி இறுதி இருப்பாக எடுக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக இருப்பு மற்றும் புத்தகப் பெறுமதியிற்கிடையே ரூபா 743,331 பெறுமதியுடைய 62.289 மெற்றிக் தொன்களின் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. அதன் விளைவொன்றாக மீளாய்வாண்டிற்கான இறுதி இருப்பு மற்றும் இலாபம் ரூபா 743,331 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) ஆனையிறவில் புதியதொரு தொழிற்சாலையினை (உப்பு துறை) தாபிப்பிற்கு ஏற்பட்ட ரூபா 3,303,491 தொகையான ஆரம்ப செலவினம் மூலதனமாக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக சாட்டப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, மீளாய்வாண்டின் இலாபம் சமமான தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, வரையறுக்கப்பட்ட மாந்தை சோல்ட் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்**

நிதிக்கூற்றுக்கில் காட்டப்பட்ட மீதிகள் மற்றும் விழா முற்பணங்களுடன் தொடர்புடைய பட்டியலுக்கிடையே ரூபா 114,750 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2015/05/25 ஆந் திகதிய பிஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் தேவைப்பாட்டிற்கு முரணாக அலுவலக ரீதியாக ஒதுக்கப்பட்ட வாகனமொன்றை பயன்படுத்தும் அதேவேளை போக்குவரத்து படியாக ரூபா 290,000 தொகையொன்று கம்பனியின் தலைவரினால் பெறப்பட்டிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மிகைகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,457,567 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 275,429 ஆகக் காணப்பட்டமையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 4,182,138 அல்லது 94 சதவீத பற்றாக்குறையொன்றினைக் சுட்டிக்காட்டுகின்றது. வருமானம் ரூபா 13,352,058 அல்லது 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனைக் கிரயம் ரூபா 21,356,921 இனால் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்கையில், நிதிசார் விளைவு தொடர்ச்சியாக குறைவடைந்து காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளுக்கான முக்கிய விகிதம் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | 2015/2016 | 2014/2015 | 2013/2014 | 2012/2013 |
|---|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 21.15 | 43.24 | 26.04 | 34.30 |
| தேறிய இலாப விகிதம் | 0.44 | 9.09 | 15.91 | 1.29 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.41 | 7.25 | 10.67 | 0.01 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் | 0.68 | 6.84 | 7.09 | 0.39 |
| நடைமுறை விகிதம் | 2.14 | 4.44 | 14.23 | 3.89 |
| விரைவு விகிதம் | 1.64 | 1.00 | 5.64 | 1.98 |

(i) உற்பத்தியின் விற்பனைக் கிரயம் அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மொத்த இலாப விகிதம் 51 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

(ii) தேறிய இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.09 சதவீதத்தலிருந்து 0.44 சதவீதம் வரை கடுமையாக குறைவடைந்து காணப்பட்டது.

(iii) ஈடுபடுத்திய மூலதனத்தின் ஒவ்வொரு ரூபாவினாலும் உழைக்கப்பட்ட இலாபம் (ஆர்ஓசிஈ) 6.84 சதவீதத்திலிருந்து 0.68 சதவீதம் வரை திடீரென்று குறைவடைந்து காணப்பட்டது. கம்பனி அதன் ஒவ்வொரு ரூபாவின் முதலீட்டிற்கும் 0.68 சத இலாபத்தினை மாத்திரம் உழைத்திருந்தமையினை அது சுட்டிக்காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

2016 நவம்பர் 11 இல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றின் காரணமாக ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட சேதம் ரூபா 2.5 மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், வாகனம் திருத்தஞ்செய்யப்படாது Toyota கம்பனி மோட்டார்வண்டி பழுதுபார்க்குமிடத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கம்பனிக்கு நிறைவேற்று பணிப்பாளரொருவர் நியமிக்கப்பட்டு, கம்பனியின் விவகாரங்களில் சம்பந்தப்பட்டிருக்காத போதிலும், மீளாய்வாண்டிற்காக ரூபா 884,425 கூட்டுத்தொகையான மாதாந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அமைய ஊழியரொருவர்க்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 453,198 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் விவகாரங்களில் அவர் ஈடுபட்டிருக்காததுடன் அவரின் பெயர் மாதாந்த ஊழியர் பரீட்சிப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 செப்தெம்பர் 22 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள்

மீளாய்வாண்டிற்கு மன்னார் மற்றும் ஆனையிறவில் அமைந்துள்ள உப்பள தொழிற்சாலைகள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம்

2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/Cir-edit/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தஞ்செய்யப்பட்ட 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம், வேண்டப்படும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை காட்டப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (i) இருப்பு முகாமைத்துவம் | பௌதீக மெய்மையாய்வில் எழுந்த இருப்புக்களின் வேறுபாட்டினை கருத்திற்கொள்ளாது இறுதி இருப்பின் பெறுமதி காட்டப்பட்டிருந்தது. |
| (ii) விலை தீர்மானம் | விலை மாறுபாட்டு தீர்மானம் தொடர்பில் ஏதேனும் திடமான தீர்மானத்தினை மேற்கொள்ளாது தன்னிச்சையாக எடுக்கப்பட்டிருந்தது. |
| (iii) வருமான இனங்காணல் | வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தினை இனங்காண்பதில் சீரான தன்மை காணப்படவில்லை. |
| (iv) நிதிக் கட்டுப்பாடு | முதலீட்டு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிராது ஆண்டின் இறுதியில் அதிகபடியான மீதி பேணப்பட்டுக் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (v) | பதிவேட்டின் பேணுகை | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |